# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/33 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09

*2157/33 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: PLDS/LND/04/ACQ/92.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2017/VE/362.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தின், பெல்மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில், நவதுன் கோறளே உடபத்துவ, இல. 170, பனாவென்ன கிராம அலுவலர் பிரிவில், இரத்தினபுரி நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. 34, பிற்சேர்க்கை இல. 59, தாள் இல. 56 இல் துண்டு இல. 1198 இல் விபரிக்கப்பட்ட 13.3546 ஹெக்டயார் விஸ்தீரண முடைய காணித் துண்டின் விபரம் :

**துண்டு இல. 1198 - விஸ்தீரணம் : 13.3546 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 71 M; கிழக்கு : துண்டு இல. 71 M மற்றும் வீதி (பிரதேச சபை); தெற்கு : வீதி (பிரதேச சபை), துண்டு இல. 71 M, துண்டு இல. 107, துண்டு இல. 102, துண்டு இல. 71 G; மேற்கு : துண்டு இல. 71 M, துண்டு இல. 107, துண்டு இல. 102, துண்டு இல. 71 G.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பெல்மடுல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. எஸ். ஜீ. ருவன்சிறி,
பிரதேச செயலாளர்,
பெல்மடுல்ல.

பிரதேச செயலகம்,
பெல்மடுல்ல,
*2020, சனவரி 08.*

*1 - 596*